30th March 1966]

எந்தவிதமான சம்பள உயர்வு, மற்ற வசதிகள் கிடையாது ஆகவே, அவர்களை நிரந்தரமாகச் செய்து சம்பள உயர்வு போன்ற வசதிகளைச் செய்து தர அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்கள் கோரிக்கைகள் தனியாகப் பரிசீலனை செய்யப்படுகின்றன.

நிலச் சீர்திருத்தச் சட்டம்

* 520 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. து. ப. அழகமுத்து :** } கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நில உச்சவரம்பு சட்டத்தின்கீழ் இது வரை அறிவிக்கப்பட்ட உபரி நஞ்சை, புஞ்சை நிலங்கள் மாவட்ட வாரியாக எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு ஏக்கர் நிலம் பிரித்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A statement[a] **showing the extent of surplus lands notified under section 18 (1) of** the Land Ceiling Act, and leased out for the crop season ending 31st March 1966 is placed on the table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையில் உபரியாக கிடைத்திருக்கிற நிலங்களைப் பார்க்கும்போது மிக கொஞ்சமாக இருக்கிறது. நன்செய், நிலங்கள் 3,634 ஏக்கர், புன்செய் 6529 ஏக்கர் என்றுதான் இருக்கிறது. ஜனங்களை ஏமாற்றுவதற்காக இந்தச் சட்டம் போடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்கள் என்ன கருத்துப்பட வேண்டுமானாலும் பேசலாம். மான்யக் கோரிக்கை விவாதம் நடந்தபோது இதன் விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். இன்றுள்ள புள்ளி விவரப்படி இவ்வளவு வரும். இந்தச் சட்டம் பரிபூர்ணமாக அமலுக்கு வந்த பிறகுதான் எவ்வளவு வரும், எப்படிச் செய்யவேண்டுமென்று சொல்ல முடியும்.

திரு. ஆ. கு. சுப்பையா : மேலும் எவ்வளவு ஏக்கர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : விவாதத்தின்போது சொன்னதாக ஞாபகம். இந்த நோட்டில் அந்த புள்ளிவிவரம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கக் கூடிய நிலங்களின் பரப்பளவு 1,635 ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது, அப்படி

---

a Printed as Appendix II on pages 511–512.

யானுல் இந்த 1,635 ஏக்கர் நிலங்கள் யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் தரப்படவில்லை. அறிவிக்கப்பட்ட உபரி நிலங்கள் யாரிடம் எந்த நிலைமையில் இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதாவது கவர்ன்மென்ட் சர்ப்ளஸ் லான்ட் என்று டிக்ளேர் செய்தாகிவிட்டது. இப்போது அவற்றில் பயிர் இருந்துகொண்டிருக்கும். அதில் இப்போது இருக்கும் மகசூலை எடுத்த பின்னுல்தான் தற்காலிகமாக குத்தகைக்கு விடவேண்டும். யார் யாருக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிப்பது வரையிலும் இந்த நிலைமை இருக்கும். உடனடியாக யாருக்கு கொடுப்பது என்பது முடிவாகவில்லையென்ருல் மகசூல் எடுத்த பின்னுல் லீஸில் ஒரு வருடத்திற்கு தற்காலிகமாக விடவேண்டும்.

திரு. செ. மாதவன் : 1961-ம் ஆண்டு இந்தச் சட்டத்தை கொண்டு வரும்போது, இந்தச் சட்டத்தின் மூலமாக ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் வரை கிடைக்கும் என்று அப்போதிருந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு உறுதி அளித்திருக்கிருர்களா ? அவ்வாறு உறுதி அளித்தார்கள் என்ருல் அளித்த உறுதி இப்போது என்ன நிலைமையில் இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், கனம் சீமைச்சாமி அவர்கள் ஏமாற்றுவதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் கோபப்பட்டார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக கிடைத்திருப்பது மிகவும் குறைவு. காரணம் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் என்று வைத்திருப்பதுதான். அதை இன்னும் குறைத்தால் இன்னும் அதிகமாக நிலங்கள் கிடைக்கும். அவ்விதம் குறைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இது சம்பந்தமாக 10, 15 நாட்கள் விவாதம் நடந்தது. இப்போது ஏற்பட்டிருப்பதே எல்லாம் பரிபூரணமாக நடந்துவிட்டது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இதில் சொல்லப்பட்டிருக்கின்ற விவரங்கள் குறிப்பிட்ட தேதியிலுள்ள புள்ளிவிவரம்.

திரு. எஸ். முருகையன் : இந்த நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களாக இருந்தால் அதில் எல்லா நிலங்களிலும் சாகுபடி செய்யாமல் கரம்பாகப் போடப்பட்டிருக்கிறதே, அதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நிலங்கள் எல்லாம் விவசாயத்தில் இருக்தக்கூடியதுதான். கவர்ன்மென்ட் டிக்ளேர் செய்தவுடன் நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். நிலத்தை அதிகாரிகள்

30th March 1966]

எடுத்துக்கொள்ளும்போது, அந்த நிலங்களில் சாகுபடி இருந்தால் அந்த மகசூலை எடுத்த பின்னுல், ரூல்ஸ் படி கொடுக்க வேண்டிய நபருக்கு கொடுக்கப்படும் வரையிலும் டெம்பரரியாக லீஸ்-க்கு விட வேண்டும். அந்தக் கட்டத்தில் தான் இப்போது இருக்கிறது.

*521 கேள்வி.—திரு. எம். எஸ். மணி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் மேற்கொண்டுள்ள நில சீர்திருத்தச் சட்டத்தில் பழத் தோட்டம், காய்கறி தோட்டம், கோழி, ஆடு, மாடு, வளர்ப்பு பண்ணை நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்ததால் விளைநிலங்கள் மேற்படி நிலங்களாக பல பகுதிகளில் மாற்றப்பட்டு வருவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) ஆம் என்றால் அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன் : இந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தை நிர்வகிக்கக்கூடிய நிர்வாகத்திற்கு 36 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருவது உண்மையா ? இவ்வளவு செலவு செய்தும், இந்த இலாகாவினுல் போதிய அளவு பலன் இல்லை என்று சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தக் கேள்வியிலிருந்து கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற உபகேள்வி எழவில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

உணவு தானியங்களின் விலை

*522 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொள்முதல் செய்யும் தானியங்களின் விலையில் ஒரு பகுதி ஈரம், பதர் ஆகியவற்றிற்காக கழித்துக் கொடுக்கப்படுகிறதா ?

(இ) கழிவு எந்த அடிப்படையில் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) For fair average quality paddy, certain specifications have been prescribed in the Annexure to Schedule I to the Madras Paddy (Maximum Prices) Order, 1964. For the paddy below